## சுருக்கம்

நெடுஞ்சாலைத்துறை – விழுப்புரம் வட்டம் – கள்ளக்குறிச்சி (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம் – நெமிலி – பாச்சாப்பாளையம் சாலை கி.மீ.5/4–ல் சேஷநதியின் குறுக்கே கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்திற்கு அணுகு சாலை அமைக்க 0.45.5 ஹெக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டமைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில், எஞ்சிய தொகையான ரூ.1,68,030/–க்கு நிதிஒதுக்கீடு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் (எச்பி.1) துறை

அரசாணை (டி) எண்.78 நாள் : 29.05.2019

விகாரி வைகாசி 15, திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்க :

1. அரசாணை (நிலை)எண்.46 (நெடுஞ்சாலை(எச்.டபிள்யூ.1)துறை, நாள் 11.03.2003.
2. தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை க.எண்.16241/ஒப்பந்தம்–2/நி.எ./2018, நாள் 27.12.2018.

---

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விழுப்புரம் வட்டம், கள்ளக்குறிச்சி கோட்டத்தைச் சார்ந்த நெமிலி – பாச்சாப்பாளையம் சாலை கி.மீ.5/4–ல் சேஷநதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் நபார்டு RIDF–VI திட்டம் 24–ன் கீழ் ரூ.84.50 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் கள்ளக்குறிச்சி கோட்டம், நெமிலி–பாச்சாப்பாளையம் சாலை கி.மீ.5/4–ல் சேஷநதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணி 28.03.2002 அன்று தொடங்கி, 05.08.2003 அன்று பால வேலைகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள நிலையில், இப்பாலத்திற்கு அணுகு சாலை அமைக்க 0.45.5 ஹெக்டேர் நிலம் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றும், நில ஆர்ஜிதம் செய்தமைக்காக மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்கள் ரூ.83,000/–ற்கு வங்கி வரைவோலையை வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்களுக்கு டெபாசிட் செய்திட அனுப்பப்பட்டுள்ளது என்றும், மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் கடிதத்தின்படி பாச்சாப்பாளையம் மற்றும் ஆதனூர் ஆகிய கிராமங்களில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான திருத்திய மதிப்பு ரூ.2,43,845/– என நிர்ணயம் செய்ததைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் செயல்முறை

ஆணையின்படி 1% ஆக உள்ள நில பதிவுக் கட்டணம் 4% ஆக அரசால் உயர்த்தப்பட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட நில பதிவுக் கட்டணம் ரூ.2,395/- (1%)-லிருந்து ரூ.9580/-(4%) என உயர்த்தி கீழ்க்கண்டவாறு செலுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| i. | நிலத்தின் மதிப்பு (0.45.5 ஹெக்டேர்) | - ரூ.2,39,450/- |
| ii. | 4% பதிவு கட்டணம் | - ரூ. 9,580/- |
| iii. | கணிணி மற்றும் செயல்முறை கட்டணம் | ரூ. 2,000/- |
| | | ரூ.2,51,030/- |

மேற்கண்ட தொகையில், ரூ.83,000/- நபார்டு RIDF-VI திட்டம் 24-ன் கீழ் செலுத்தப்பட்டது என்றும், மீதம் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.1,68,030/- ஆகும் என்றும் தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் தமது கடிதத்தில், நில எடுப்புப் பணிக்கு, மாவட்ட நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையான ரூ.2,51,030/-ல் ஏற்கெனவே ரூ.83,000/- செலுத்தப்பட்டுவிட்டதால், எஞ்சிய தொகையான ரூ.1,68,030/-ஐ வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் அவர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது என்றும், மேலும் RIDF-24 (NABARD BRIDGES) என்ற கணக்குத் தலைப்பு நடைமுறையில் இல்லாததால், தற்போது நடைமுறையிலுள்ள "5054 04 800 JK 6403" என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கருத்துருவானது அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, விழுப்புரம் வட்டம், கள்ளக்குறிச்சி கோட்டம், நெமிலி-பாச்சாப்பாளையம் சாலை கி.மீ.5/4-ல் சேஷநதியின் குறுக்கே கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்திற்கு அணுகு சாலை அமைக்க, நில எடுப்பு செய்தமைக்காக நிர்ணயம் செய்யப்பட்ட தொகையான ரூ.2,51,030/-ல் ரூ.83,000/- ஏற்கெனவே செலுத்தப்பட்டு விட்டதால், எஞ்சிய தொகையான ரூ.1,68,030/-ற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து முப்பது மட்டும்)-ஐ தற்போது நடைமுறையிலுள்ள கணக்குத் தலைப்பில் நிதி ஒதுக்கீடு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

5054-சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு -

04 மாவட்ட சாலைகளும் ஏனைய சாலைகளும் -800 -

ஏனைய செலவு- மாநிலச் செலவினங்கள்- JK -

புறவழிச்சாலை அமைப்புக்காக நிலம் கையகப்படுத்துதல்-464-

நிலங்கள்-01-நிலங்கள் - அனுமதித்தது.

(D.P.Code 5054-04-800-JK-6403)(பழையது)

(D.P.Code 5054-04-800-JK-46401)(புதியது)

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு எண். 21675/பொ.ப.1/19 நாள்.23.05.2019–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே.பிரபாகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்

தலைமைப்பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை–25.

மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் மாவட்டம்

மாநிலக் கணக்காயர், சென்னை –18.

மாவட்ட கருவூல அலுவலர், கடலூர்.

நகல்

நிதி(பொ.ப.1/வ.செ.பொது.1/வ.செ.பொது.II),துறை, சென்னை –9.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –9

மாண்புமிகு முதலமைச்சர்அவர்களின் கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை –9

அரசு கூடுதல் செயலாளர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை –9

இ.கோ/உதிரி நகல்.

(கோ.எண்.242/எச்.ப்பி.1/2019)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்